


மணப்பாக்கம், மியாட் மருத்துவமனையில், புதிதாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை திட்டம் துவங்கப்பட்டுள்ளது. முதல் அறுவை சிகிச்சை செய்து கொண்ட, ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த சிவக்குமாருடன், மருத்துவமனையின் தலைவர், மல்லிகா மோகன்தாஸ், நிர்வாக இயக்குனர், மோகன்தாஸ் மற்றும் இணை நிர்வாக இயக்குனர் பிரித்வ் மோகன்தாஸ் .

# கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை பிரிவு 'மியாட்' மருத்துவமனையில் துவக்கம்

சென்னை, பிப். 6-

மியாட் மருத்துவமனை, தன், முதல் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்துள்ளது.

சென்னை, மணப்பாக்கத்தில் உள்ள, மியாட் மருத்துவமனையில், 2010ம் ஆண்டு, குடல், இரைப்பை மற்றும் கல்லீரல் நோய் சிகிச்சை மையம் துவங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, தற்போது, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை பிரிவு துவங்கப்பட்டுள்ளது.

இதில், ஈரோடு மாவட்டம், காலிங்கராயன்பாளையத்தைச் சேர்ந்த சிவகுமார், 39, என்பவருக்கு, முதல், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து, இம்மருத்துவமனையின் குடல், இரைப்பை மற்றும் கல்லீரல் நோய் சிகிச்சை மைய இயக்குனர் ஜார்ஜ் சாண்டி கூறியதாவது:

இந்தியாவில், சிறுநீரகத்திற்கு அடுத்ததாக, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை அதிகளவு செய்யப்படுகிறது. கல்லீரல் நோய்கள் அதிகரிப்புக்கு, குடிப் பழக்கம், உடல் பருமன், வாழ்க்கை முறை மாற்றம் போன்றவை, காரணங்களாக உள்ளன.

எங்கள் மருத்துவமனையில், முதல், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்ட சிவகுமாருக்கு, நீரிழிவு நோய் மற்றும் குடிப் பழக்கம் இருந்துள்ளது.

இவருக்கு, கடந்த மாதம், 5ம் தேதி, மூளைச் சாவு ஏற்பட்ட ஒருவரிடமிருந்து பெறப்பட்ட கல்லீரலை கொண்டு, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்துள்ளோம்.

எங்கள் மையத்தில், பச்சிளம் குழந்தைகள் முதல் அனைத்து வயதினருக்கும், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும். இதற்கு, 15 லட்சம் ரூபாய் வரை செலவாகும்.

இவ்வாறு ஜார்ஜ் சாண்டி கூறினார்.

சிவகுமார் கூறியதாவது:

சினிமா தியேட்டரில், 'கேன்டீன்' நடத்தி வந்தேன். தனியார் மருத்துவமனை ஒன்றில், ஓராண்டிற்கு மேலாக, கல்லீரல் பாதிப்புக்கு சிகிச்சை பெற்று வந்தேன். நோய் குணமாகவில்லை.

மருத்துவர்கள், என் உயிருக்கு ஆறு மாதம் கெடு விதித்த சூழலில், மியாட் மருத்துவமனைக்கு வந்தேன். அறுவை சிகிச்சைக்கு முன், ஒரு இட்லி கூட சாப்பிட முடியாமல், உடல் சோர்ந்திருந்தேன். தற்போது, நன்றாக உண்ண முடிகிறது.

இவ்வாறு சிவகுமார் கூறினார். இவருக்கு, தீபா என்ற மனைவி, ஒரு மகன் மற்றும் மகள் உள்ளனர்.